## கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,

## ஸ்ரீவில்லிபுத்தூர்.

**IDOP. No: 45/2025** **நாள்: 10.02.2026**

**மசா.1, திரு.கோரேஸ் இம்மானுவேல்**

**ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் கடந்த 2014ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி நடந்தது. அன்றைய தினம் திருமண வரவேற்பும் நடந்தது. திருமண வரவேற்புக்காக ஏற்பட்ட செலவினங்களான மொத்தம் ரூ.7 லட்சத்தினை எதிர்மனுதாரர்களின் பெற்றோர்கள் தான் ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் எங்கள் தரப்பிலும் எதிர்மனுதாரர் தரப்பிலும் சேர்ந்து தான் அந்த செலவினங்களை செய்தோம். எதிர்மனுதாரருக்கு 50 பவுன் நகை போட்டு தான் திருமணம் நடந்தது என்றால் அப்படியில்லை. திருமணத்தின்போது எனக்கு மொத்தம் 9 பவுனில் பிரேஸ்லெட்டும்,மோதிரம், செயின் ஆகியவைகளையும் என் தங்கைக்கு பட்டுப்புடவையும் கொடுத்து தான் திருமணம் நடந்தது என்று சொன்னால் அப்படியில்லை. மேற்காணும் சீர்வரிசைகளை கொடுத்த வகைக்காக திருமணத்தின் போது எடுத்த வீடியோவில் துலங்கும் என்றால் சரிதான். திருமண நிச்சயதார்த்தம் ஆனது 2014ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 தேதி நடந்தது. அன்றைய தினம் ரூ.2 லட்சம் ரொக்கமும், ஒரு பிரேஸ்லெட்டும், ஒரு மோதிரமும் கேட்டு வாங்கி கொண்டேன் என்றால் நான் கேட்கவில்லை பெண் வீட்டாரே அவைகளை கொடுத்தார்கள். நிச்சயதார்த்தம் முடிந்து 1 மாதம் கழித்து எதிர்மனுதாரரின் தாயார், பெரியப்பாசெல்வராஜ், சித்தப்பா டேவிட், சித்தி டேய்சி, அம்மாவின் தாய்மாமா பால்ராஜ், ஆர்.கே.பி.ஜெயகுமார் எல்லோருமாக சேர்ந்து எனக்கு ரூ.1 லட்சத்தை ரொக்கமாக கொடுத்தார்கள் என்று கேட்டால் என் கையில் ரொக்கமாக கொடுக்கவில்லை என்பதால் எனக்கு தெரியவில்லை என் அப்பாவிடம் கொடுத்துள்ளார்கள் எவ்வளவு தொகை என்று எனக்க தெரியவில்லை. திருமணம் சமயத்தில் நான் சர்ச்சில் ஊழியராக வேலை பார்ப்பதாக சொல்லி தான் திருமணம் நடந்தது. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையில் 05.07.2015ம் ஆண்டு ஒரு பையன் பிறந்துள்ளார். அது அறுவைசிகிச்சை மூலமாக பிறந்த குழந்தையாகும். அதற்கான செலவினங்களை எதிர்மனுதாரரின் வீட்டார்கள் தான் செய்தார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் 7 மாத கர்ப்பிணியாக இருந்த சமயத்தில் பிரசவத்திற்காக தனது பெற்றோர் ஊரான திருநெல்வேலி மாவட்டம் பனங்குடிக்கு சென்றுவிட்டார் என்றால் அது சரிதான். வளைகாப்பு செலவினங்களையும் எதிர்மனுதாரர் வீட்டாரே ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் வளைகாப்பை நடத்தவேண்டாம் என்று எதிர்மனுதாரர் வீட்டில் சொன்னார்கள். நான் திருநெல்வேலி மாவட்டம் கரிசல் ஊரிலும் ஊழியம் செய்துள்ளேன் அதுபோல் மற்ற ஊர்களிலும் ஊழியம் செய்துள்ளேன். கரிசல் ஊரில் தான் என் அக்கா குடும்பத்தார் உள்ளார்கள் என்றும் அங்குள்ள வீட்டில் தங்கியிருந்து தான் நான் உழியம் செய்து வந்தேன் என்று சொன்னால் என் அக்கா

சென்னையில் வசிக்கிறார். என் அக்காவின் சொந்தக்காரர் வீட்டில் இருந்து தான் நான் ஊழியம் செய்து வந்தேன். கரிசல் ஊரில் இருந்து எதிர்மனுதாரரின் ஊருக்கு செல்வதற்கு சுமார் 1/2 மணி நேரம் தான் ஆகும் என்றால் சரிதான். என் மனைவியானவர் 7 மாத கர்ப்பிணியாக இருந்து தன் பெற்றோர் வீட்டிற்கு பிரசவத்திற்காக சென்ற சமயத்தில நான் கரிசல் ஊரில இருந்து மாதம் 1 முறை தான் என் மனைவியை பார்த்து வநதேன் என்று சொன்னால் அப்படியில்லை பலமுறை பார்த்துவந்தேன்.நான் ஊழியம் செய்யபபோம் இடததில் எனக்கு நிறைய பெண்களுடன் தொடர்பு உள்ளது என்று சொன்னால் அப்படியில்லை. இந்த விசயம் தெரிந்து தான் எனக்கும் எதிர்மனுதாருக்கும் இடையில் சண்டை வந்தது என்றால் அப்படியில்லை. ஒரு முறை சண்டை வந்ததில் நான் எதிர்மனுதாரரை தலையணையை வைத்து அமுக்கி கொலை செய்ய முயற்சி செய்தேன் என்று சொன்னால் அப்படியில்லை. எங்கள் திருமணத்திற்கு பின்பு கார் மற்றும் மோட்டார் சைக்கிளை வாங்கி வைத்திருந்தோம் என்றால் அதுசரிதான். குழந்தை பிறந்து 6 மாதம் கழித்துஎதிர்மனுதாரையும் குழந்தையும் என் வீட்டிற்கு அழைத்து வந்தோம். குழந்தைத் பிறந்து 1 மாதத்திற்குள் எனக்கு ஊழியம் செய்யப்போகும் இடத்தில் பல பெண்களுடன் தொடர்பு இருப்பதாக சொல்லி எதிர்மனுதாரர் பிரச்சனை செய்தபோது நான் மறுத்து இங்கேயே தற்கொலை செய்து கொள்வேன் என்று எதிர்மனுதாரை மிரட்டினேன் என்று சொன்னால் அது சரியல்ல.இது பெரிய பிரச்சனையாகி உள்ளூரில் உள்ள ரைஸ்மில் நடத்திவரும் செல்வராஜ் என்பவர் மூலமாக சமரசம் பேசப்பட்டது என்று சொன்னால் அப்படி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. என்னுடைய 2 வதுசகோதரி தற்போது அவருடைய கணவரிடமிருந்து பிரிந்து தான் உள்ளார் என்றால் அது சரிதான். அதனால் என்னுடைய தங்கையின் கணவரின் வீட்டாருக்கும் , எனது பெற்றோருக்கும் இடையில் நகை , பணம் சம்மந்தமாக அடிக்கடி பிரச்சனை ஏற்படும் என்று சொன்னால் அப்படியில்லை. என் மனைவியானவர் என் வீட்டிற்கு வந்த சமயத்தில் தனி அறையில் இருக்கும் போதுஅவரை வீட்டில் உள்ள மத்திய அறைக்கு வந்து இருக்கும் படியும் தனி அறையை பூட்டாமல்இருக்கும் படியும் என்அப்பா ெ சால்லிவந்தார் என்றால் அது சரிதான். எதிர்மனுதாரரை என் வீடடிற்கு அழைத்து வந்தவுடன்அவருக்கு உடல்நலம் சரியில்லாமல் போனது என்று சொன்னால் அது சரிதான். எதிர்மனுதாரரின் தாயார் சிவகாசிக்கு வந்து அங்கு வைத்து தன் மகளுக்கு மருத்துவ செலவுகளை மேற்கொண்டார் என்று சொன்னால் என் அப்பா மருத்துவ செலவினை பார்த்துக்கொள்வதாக சொன்னார் ஆனால் எதிர்மனுதாரரின் அம்மா தான் திருநெல்வேலிக்கு அழைத்து சென்று மருத்துவ சிகிச்சையை செய்வதாக சொன்னார். திருநெல்வேலியில் உள்ள லட்சுமி மாதவன் என்ற மருத்துவமனைக்கு அழைத்து செல்ல எதிர்மனுதாரரின் தாயார் சொல்லி நானும் உடன் சென்றேன். எதிர்மனுதாரர் என் வீட்டில் இருந்த போது என் பெற்றோர்கள் எதிர்மனுதாரரிடம் தகராறு செய்ததில்அதனால் எதிர்மனுதாருக்கு மனநலம் பாதிக்கப்பட்டு அதனால் அவரது தாயார் திருநெல்வேலியில இருந்து வந்து திருநெல்வேலியில உள்ள லட்சுமி மாதவன்

என்ற மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றால் ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறையோ என் மனைவிக்கு தலைவலி காய்ச்சல் என்று சொல்லி கார் எடுத்து வந்து சண்டை போட்டு விட்டு எதிர்மனுதாரை அழைத்து செல்வார்கள். எதிர்மனுதாரர் திருநெல்வேலியி் உள்ள மருத்துவமனையில்வைத்து சிகிச்சை பெற்று வந்த போது நானும் , அங்கு சென்று எதிர்மனுதாரரிடமும் அவர்து பெற்றோரிடமு் சண்டை போட்டேன் என்று அதனால் அங்குள்ள மருத்துவர்கள் என்னை கண்டித்தார்கள் என்று சொன்னால் என்னை கண்டிக்கவில்லை., எதிர்மனுதாரரின் அம்மாவைதான் கண்டித்தார்கள். சிகிச்சை முடிந்த் என் மனைவியானவரை எங்கு கூட்டி சென்றார்கள்என்று கேட்டால் நாங்கள் சிவகாசிக்கு வரச்சொன்னோம் ஆனால் எதிர்மனுதாரரின் பெற்றோர் திருநெல்வேலிக்கு தான் அழைத்து சென்றார்கள். எதிர்மனுதாரருக்கு சிறிது அசௌகரியம் ஏற்பட்டதும் கூட எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் தான் அழைத்து சென்று பார்க்கவேண்டியதாகிவிட்டது எனறும் நாங்கள்எதிர்மனுதாரரை பார்க்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய தந்தையும் தாயும் செய்த பிரச்சனைக்காக தான் நாங்கள் தனிக்குடித்தனம் சென்றோம் என்று சொன்னால் அவர்கள் தான் தனிக்குடித்தனம் சென்றார்கள். குழந்தைக்கு முதலாம் ஆண்டு பிறந்த நாள் விழா எதிர்மனுதாரர் இல்லாமல் கொண்டாடினோமா என்று கேட்டால் எதிர்மனுதாரரை அழைத்தும் வரவில்லை அவரில்லாமல் பிறந்தநாள் விழா கொண்டாடினோம். நானும் எதிர்மனுதாரரும் தனிக்குடித்தனமாக இருந்த சமயத்தில் தான் எதிர்மனுதாரரை வெளியில் போக சொல்லிவிட்டு நாங்கள் மட்டுமே குழந்தையின் பிறந்த நாள் விழாவை கொண்டாடியுள்ளோம் என்று சொன்னால் எதிர்மனுதாரர் தான் வரவில்லை. நாங்கள் தனிக்குடித்தனம் சென்ற பிறகு நான் தனி அறையில் எப்போதும் தனியாக தான் இருப்பேன் என்று சொன்னால் அந்த வீட்டில் ஒரு அறை தான் உள்ளது. ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது செல்போனில் CHAT செய்து கொண்டிருந்த போது என் மனைவியானவர் என்னை ்கண்டித்து பிரச்சனை செய்தார் என்று சொன்னால் அப்படியில்லை. நா்ன ஊழியம் செய்து் வருவதால் எனக்கு நிறைய பெண்களுடன் தொடர்பு உள்ளது என்றும் அதனால் செல்போனில் பல பெண்களிடம் நான் Chat செய்து வருவதும் அதனால் எனக்கும் என் மனைவிக்கும இடையில் பிரச்சனை ஏற்பட்டு வந்தது என்று சொன்னால் எதிர்மனுதாரரின் தாயார் தான் அப்படி சொல்லி வந்தார். பிரச்சனை வரும்போது எல்லாம் 2 வது மாடியில் இருந்து குதித்து செத்துவிடு என்று நான் எதிர்மனுதாரரிடம் சொல்லிவந்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. 2019ம் ஆண்டு எதிர்மனுதாரர் வழுக்கி கீழே விழுந்து அவருக்கு காயம ஏற்பட்டது என்றால் சரிதான். அதற்கான சிகிச்சையும் நான் செய்யமாட்டேன் என்றும் பனங்குடிக்கு சென்றுவிடு என்று நான் சொல்லிவந்தேன் என்றால் அது சரியல்ல. அதற்கான சிகிச்சையை எதிர்மனுதாரரின் பெற்றோர் வந்து அவரது ஊருக்கு அழைத்து சென்றார்கள். எதிர்மனுதாரரின் தாயார் சிவகாசியில் உள்ள மருத்துவமனையில் வைத்து எதிர்மனுதாரருக்கு சிகிச்சை மேற்கொண்டார் என்றும்

அங்குள்ள மருத்துவ குறிப்புகளில் துலங்கும் என்றால் சரிதான். அங்குள்ள மருத்துவர் ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி சொன்ன போது அதனை நான் தடுத்து வந்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. அதன் பின்பு எதிர்மனுதாரரை அவரது பெற்றோர் திருநெல்வேலிக்கு அழைத்து சென்றார்கள் என்றால் அது சரிதான். அவர் திருநெல்வேலியில் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டபோது மருத்துவ கனிராஜ் என்பவரின் மனைவியிடம் நான் செல்போனில் என் மனைவி உடல்நலம் எப்படி உள்ளது என்று கேட்டு தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் ஆமாம். என் மகன் தற்போது திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் உள்ள கிங்க்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் 5ம் வகுப்பு படிக்கிறார். அதற்கான செலவினங்களை எதிர்மனுதாரர் தான் பாரத்துக்கொண்டார்என்று சொன்னால் ஆரம்பத்தில் பார்த்துக்கொண்டேன் தற்போது எதிர்மனுதாரின் பெற்றோர் பார்த்து வருகிறார். நான் இதற்கு முன்பாக எதிர்மனுதாருக்கு எதிராக எத்தனை வழ்கது போட்டேன் என்று கேட்டால் நான் எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழ வரவேண்டி ஒரு மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன். அதற்கு எதிர்மனுதாரர் திருநெல்வேலியில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கை நடத்த வேண்டி மாண்பு மிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் ஒரு மாறுதல் மனுவை தாக்கல் செய்திருந்தார் அதனால் நான் தாக்கல் செய்திருந்த மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டேன். அதன் பின்பு 2021ம் ஆண்டு நான் விவாகரத்துகோரி இந்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தேன், அப்போது எ திர்மனுதாரரின் தாத்தா எதிர்மனுதாரரையும் என்னையும் சேர்த்து வைப்பதாக சொல்லியதின் பேரில் ் நான் அந்த மனுவையும் வாபஸ் பெற்றேன். நான் கடந்த 4 ஆண்டு காலமாக எதிர்மனுதாரை என்னோடு சேர்த்து வைக்கும்படி கேட்டும்அவர்கள் முன்வரவில்லை. அதன் பின்பு நான் இந்த மனுவை தாக்கல் செய்தேன் 2021ம் ஆண்டு நான் தாக்கல் செய்திருந்த மனுவில் சொல்லிய சங்கதிகளை தான் வேறு புதிதாக எதுவும் சொல்லாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும் எதிர்மனுதாரரும் தனியாக பிரிந்து வாழ்கின்ற காலத்தில் இருந்து எதிர்மனுதாரருக்கும் என் குழந்தைக்கும் இதுநாள் வரையிலும் ஜீவனாம்சம் தொகையாக எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் என்னுடைய ஏடிஎம் அட்டையானது எதிர்மனுதாரரிடம் தான் இருந்து நான் கடந்த 1 ஆண்டுக்கு முன்பு தான் என்னுடைய ஏடிஎம் அட்டையை வாங்கி வ்நதேன் அதனா்ல வரையிலும் என்னுடைய பணத்தை எதிர்மனுதாரர் ஏடிஎம் மூலமாக எடுத்துவந்துள்ளார். 2020ம் ஆண்டு முதல் எதிர்மனுதாரர் தான் குழந்தைக்கு பள்ளிக்கூடத்தில் பள்ளிக்கட்டணம் செலுத்தி வந்த விபரம் ரசீதுகள் மூலமாக துலங்கும் என்று சொன்னால் நான் நேரில் போகும் போது பீஸ் கட்டவேண்டும் என்று சொல்ல நான் பணம் கொடுத்து வந்தேன். விவாகரத்திற்கு அடிப்படை காரணம் என்னுடைய தந்தையும், தாயும் செய்த கொடுமைகள் தான் என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு எதிராகவும் என் பெற்றோருக்கு எதிராகவும வள்ளியூரில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தில் DVC வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இந்த IDOP.45/2005 மனுவில்

பக்கம் 8 ல் பாரா 8 ல் 7 வது வரியில் " எதிர்மனுதாரர் செல்லும் சர்ச் மூலமான போதகரால் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு கடந்த மே முதல் வாரத்தில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு விதித்த நிபந்தனைப்படியாக சிவகாசியிலிருந்து விளாம்பட்டி செல்லும் பாதையில் வீடு அமர்த்தி அங்கு உபய மனுதாரர்கள் குடிபெயர்ந்தனர் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்திய விவாகரத்து சட்டம் பிரிவு 10ன் படி விவாகரத்து கோருவதற்கு எந்த முகாந்திரமும் என் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.